Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | STC.644/2025 | | |
| Witness for Prosecution | : PW1 | | |
| Name | துரை | Taluk : | |
| Father's / Husband Name | மாரியப்பன் | Calling : | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Village | நாகரசம்பட்டி | Age : | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 07.04.2026

எதிரி ஆஜர்.

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது நாகரசம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.01.2023 அன்று பாரூர் காவல் நிலையத்தில் நான் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் திரு. நடராஜன் அவர்களும், மற்றும் மகேந்திரன் ஆகியோர்களுடன் 15.00 மணிக்கு பண்ணந்தூர் முதல் இந்திரா நகர் செல்லும் பிரிவு ரோட்டின் அருகே கண்காணிப்பிற்கு செல்லும்போது மகேஷ்வரன் என்பவர் சத்தம்போட்டு பேசிக்கொண்டிருந்தார். அப்போது காவல் உதவி ஆய்வாளர் சத்தம் போடாதே என்று கூறினார். தகாத வார்த்தையில் போவோர், வருவோரை திட்டிக்கொண்டிருந்தார். அவரை காவல் நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதில் நான் காவல் உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆஜர் எதிரி தான் அந்த நபர் ஆவார். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

காலை ரோந்து எத்தனை மணிக்கு ஆரம்பிக்கும் என்றால் 10.00 மணிக்கு, மாலை என்றால் 06.00 மணிக்கு. எனக்கு மாலை ரோந்து என்றால் இல்லை, பகல் ரோந்து. நடராஜன் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் என்ன பணி என்றால் காலை ரோந்துபணி. 3 பேரும் எந்த வண்டியில் சென்றோம் என்றால்

நான் ஒரு தனி இருசக்கர வாகனத்திலும், நடராஜன் ஒரு இருசக்கர வானகத்திலும், மகேந்திரன் எந்த வாகனத்தில் வந்தார் என்று தெரியவில்லை. வழக்கமாக யார் யாருக்கு என்ன பணி என்று தனித்தனியாக சொல்லிவிடுவார் என்றால் சரிதான். இரு உதவி ஆய்வாளருக்கும் ஒரே இடத்தில் ரோந்து பணி இருக்காது என்றால் சரிதான். அந்த பிரிவு ரோடு எந்த எந்த ஊருக்கு செல்லும் சாலையில் சந்திக்கும் என்றால்  சம்மவ இடம் பிரிவு ரோடு இல்லை, இந்திரா நகர் ஊருக்கு போகும் வழி.

உதவி ஆய்வாளர் எனக்கு முன்பாக சென்று அங்கு இருந்தாரா என்றால் இல்லை, யார் முதலில் சென்றது என்றால் தெரியவில்லை. இந்த இடத்தில் வீடுகள் இருந்தனவா என்றால் 200 அடி தூரத்தில் வீடுகள் இருந்தன. நாங்கள் செல்லும்போது பொதுமக்கள் யாரும் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். எத்தனை ஆண்கள், எத்தனை பெண்கள் என்றால் தெரியாது. அங்கு இருந்த ஆண்கள் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி காவல் நிலையத்தில் எத்தனை ஆண்டுகள் பணி செய்தேன் என்றால் 3 ஆண்டுகள். எங்கள் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட கொலை வழக்கில் Cr.No.20/2022 ஆஜர் எதிரியும் மற்றும் பரமசிவம், வடிவேல், அப்பு (எ) சசிக்குமார், தரணி, செல்வம் மற்றும் 12 பேர் அதில் எதிரிகள் என்றால் சரிதான். அந்த வழக்கு எதிரிகள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் எதிரிகளில் அனைத்து ஆண் எதிரிகள் மீதும் பெண்களை தவிர இதே பிரிவு வழக்கு தனித்தனியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

தனித்தனியாக வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு நேரத்தில், வெவ்வேறு இடங்களில் சம்பவம் நடந்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். கொலை வழக்கில் உள்ள ஆண் எதிரிகள் தவிர வேறு நபர்கள் யார் மீதும் 294(b) வழக்கு தனியாக பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். மற்ற எதிரிகள் மீதும் போடப்பட்ட வழக்குகளிலும் நான் தான் சாட்சி, மகேந்திரன் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு கொலை வழக்கில் எதிரிகள் மீது மட்டும் 294(b) வழக்கு பதிவு செய்யப்பட்டதற்காக காரணம் சொல்லமுடியுமா என்றால் காரணம் இல்லை. இவ்வழக்கில் மகேந்திரன் உதவி ஆய்வாளர் அவர்களுக்கு உத்தரவு கட்டுப்பட்டு அவருக்கு கீழ் பணிபுரிபவர் என்றால் சரிதான். அனைத்து வழக்குகளிலும் நானும், மற்ற போலீசார்களும் தான் சாட்சி. தனிநபர் சாட்சிகள் இல்லை என்றால் சரிதான்.

தனிநபர்கள் யாரும் எதிரி ஆபசமாக பேசியதாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரி ஆபசமாக பேசவில்லை, பேசிஇருந்தால் தனிநபர் சாட்சியம் இருந்திருக்கும் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தன்னிச்சையாக சரணடைந்து விட்டார்கள் என்ற காரணத்தினால் அவ்வழக்கில் எதிரிகள் அனைவரும் மீதும் பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் இல்லை. தனிநபர் சாட்சிகள் சேர்த்திருந்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் காவல் உதவி ஆய்வளருக்கு கட்டுப்பட்டவர்களை சாட்சியாக வைத்து உதவி ஆய்வாளர் தானே வழக்கு பதிவு செய்து விசாரணை அதிகாரியாக இருந்து இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. உதவி ஆய்வாளர் கேட்டுக்கெண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/–D.Saravanan,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli (FAC)